பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 20 திங்கட்கிழமை 06.12.2021 கதிர் 259

## கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வவுனியா வடக்கு சபையின் 'பட்ஜட்' மீண்டும் தோற்கடிப்பு

(வவுனியா நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 9 மேலதிக ☞ 2

## காணி சுவீகரிப்புக்கு எதிராகப் போராடியவர்களை கஞ்சா கடத்தினர் எனக் கைதுசெய்த கடற்படையினர்

### மாதகலில் உறவினர்கள் எதிர்ப்புப் போராட்டம்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

கஞ்சா கடத்தினர் எனக் குற்றச்சாட்டை முன்வைத்து இருவரைக் கைதுசெய்த கடற்படையினருக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மாதகலில் கவனவீர்ப்பு போராட்டம் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டது.

மாதகல் பகுதியைச் சேர்ந்த இருவரை, கஞ்சா கடத்திய சந்தேகத்தில் கடற்படையினர் நேற்று கைதுசெய்தனர்.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்டவர்களது உறவினர்கள் இன்று மாதகல் பகுதியில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட ☞ 2

## கஞ்சா கடத்திய இருவர் கைது!

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் இரண்டு கோடி ரூபா பெறுமதியான 145 கிலோ கேரள கஞ்சாவைக் கடத்திச் சென்ற இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கூலர் ரக வாகனத்தை இன்று வவுனியா ஓமந்தையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் வழிமறித்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அதில் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது அந்த வாகனத்தில் பொதி செய்து மறைத்து வைக்கப்பட்டிருந்த 145 கிலோ கேரள கஞ்சாவை மீட்டமையுடன், வாகனத்தையும், அதில் பயணித்த சாரதி உட்பட இருவரையும்கைதுசெய்துபொலிஸ்நிலையத்துக்கு அழைத்துச் ☞ 2

# நாட்டையும் மீட்டோம்; வீட்டையும் காத்தோம்

## கடந்த நல்லாட்சி தொடர்பில் சபையில் ரணில் எடுத்துரைப்பு



எங்கள் ஆட்சியில் நாம் நாட்டு பொருளாதாரத்தை மட்டுமல்ல வீட்டு பொருளாதாரத்தையும் பாதுகாத்தோம். மக்களுக்கு மூவேளைகளும் சாப்பிடக்கூடிய நிலைமை காணப்பட்டது. சமையல் அறையின் பாதுகாப்புக் கூட உறுதிப்படுத்தப்பட்டது. அங்கு வெடிப்புகள் எதுவும் இடம்பெறவில்லை. ☞ 2


## வடமேல் ஆளுநரின் உயிரை பலியெடுத்தது கொரோனா



வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே தனது 83 ஆவது வயதில் காலமானார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான அவர், வைத்தியசாலையில் சிகிச்சை ☞ 2

## பிரியந்த குமார படுகொலை; முக்கிய சந்தேகநபர் கைது!






பாகிஸ்தான்தொழிற்சாலையில் இலங்கை முகாமையாளர்பிரியந்த குமார படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபரான இம்தியாஸ் ☞ 2

## சபை அமர்வை இன்றும் புறக்கணித்த சஜித் அணி



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டாவது நாளாக இன்றும் சபை அமர்வைப் புறக்கணித்தனர்.

சபைக்குள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரையில் நாடாளுமன்ற அமர்வைப் புறக்கணிப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் தீர்மானம் எடுத்துள்ளனர்.

இதன்படிநேற்று சபை அமர்வில் கலந்துகொள்வதைத் தவிர்த்த அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் இன்றும் அதில் கலந்துகொள்ளவில்லை. ☞ 2

## இரு நாட்டு உறவுகள் பற்றி ஜெய்சங்கர் - பீரிஸ் சந்திப்பு



இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அபுதாபியில் நடைபெற்ற 5 ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்றிருந்தபோதே, இருவருக்கும் இடையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இலங்கைக்கும் ☞ 2



## யாழில் காஸ் களஞ்சியத்தை அகற்றக் கோரி ஆர்ப்பாட்டம்

(ந.லோகதயாளன்)

எரிவாயு சிலிண்டர் களஞ்சியத்தை அகற்றக் கோரி யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான விநியோக களஞ்சியத்துக்கு முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## வவுனியா வடக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகளால் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் ச.தணிகாசலம் தலைமையில் இன்று இடம்பெற்றது.

கடந்த மாதம் இடம்பெற்ற அமர்வில் சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜட் முன்வைக்கப்பட்ட நிலையில் அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு தோற்கடிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இன்று அது மீளவும் முன்வைக்கப்பட்டது.

இதன்போது மக்கள் சார்பான வேலைத்திட்டத்துக்கு போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லை எனப் பல்வேறு உறுப்பினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக இந்த வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வி.சஞ்சுதன் கருத்துத் தெரிவித்தார். அவரது கருத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் முகுந்தன் வழிமொழிந்தார்.

அநேக உறுப்பினர்களின் எதிர்ப்பால் வரவு - செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

அந்தவகையில் பட்ஜட்டுக்கு எதிராக தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனி, சுயேச்சைக் குழு ஆகியவற்றைச் சேர்ந்த 17 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

பட்ஜட்டுக்கு ஆதரவாக தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த 8 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினரும் வாக்களித்திருந்தனர். இதனால் 9வாக்குகளால் 2021ஆம் ஆண்டுக்கான சபையின் பட்ஜட் இரண்டாவது முறையாகவும் தோல்வியடைந்தது.

இந்நிலையில், உள்ளூராட்சி சட்டங்களின்படி பிரதேச சபைக்கு புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் விரைவில் இடம்பெறவுள்ளது. (100)

## கஞ்சா கடத்திய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றனர்.

மீட்கபட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் இரண்டு கோடி ரூபா இருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (100)

## நாட்டையும் மீட்டோம் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி. இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

2015 முதல் 2019 வரை நாட்டு பொருளாதாரம் எப்படி இருந்தது என ஆளுங்கட்சியினர் எழுப்பிய கேள்விக்குப் பதிலடி கொடுக்கும் விதத்திலேயே ரணில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அக்காலப்பகுதியில் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தது. மக்களின் வருமானம் குறையவில்லை. தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. இன்று அந்நிலைமை இல்லை. மக்களும் அந்த காலமே போதும் என தற்போது எண்ணுகின்றனர் என்றும் ரணில் குறிப்பிட்டார்.

அத்துடன், அரசின் அந்நிய செலாவணி கையிருப்பு தொடர்பிலும் சபையில் ரணில் கேள்வி எழுப்பினார்.

## வடமேல் ஆளுநரின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்று வந்த நிலையிலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இலங்கையில் சிரேஷ்ட அரசியல்வாதிகளுள் ஒருவரான ராஜா கொல்லுரே, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளராகவும் பதவி வகித்துள்ளார்.

ஆசிரியர்களின் போராட்டம் தொடர்பில் அவர் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்தால் கட்சியிலிருந்து அவர் நீக்கப்பட்டார். எனினும், நீதிமன்றத்தை நாடி இதற்கு இடைக்காலத் தடை உத்தரவை அவர் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரியந்த குமார ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலியா பில்லி என்பவர் ராவல்பிண்டி செல்லும் பஸ்ஸில் வைத்து பாகிஸ்தான் பஞ்சாப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

(விரிவான செய்தி 8ஆம் பக்கத்தில்)

## இரு நாட்டு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

பொருளாதாரத்துறையில் ஒத்துழைப்பு, கலாசாரம் மற்றும் மக்களுக்கிடையிலான முன்முயற்சிகள் மற்றும் பிராந்திய நிறுவனங்களில் கூட்டு முயற்சிகள் ஆகியன தொடர்பில் குறிப்பாகக் கலந்துரையாடப்பட்டது என இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

## சபை அமர்வை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் மனுஷ நாணயக்காரவுக்கு உரையாற்றுவதற்காக மேலதிக நேரத்தை வழங்காமை தொடர்பில் சபையில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

இதன்போது சபைக்குள் அமைதியின்மை ஏற்பட்ட நிலையில், மறுநாள் சனிக்கிழமை அது தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டது.

இந்நிலையில், நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இது தொடர்பாக இணக்கம் காணப்படாத நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியினர் சபைநடவடிக்கைகளைப்புறக்கணிக்கத் தீர்மானித்தனர்.

## யாழில் காஸ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் - கொட்டடி வைத்திய சாலை வீதியில் அமைந்துள்ள களஞ்சியம் முன்பாகவே இன்று காலை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், மக்களின் உயிரா? பண பலமா?, அச்சமற்ற வாழ்விடம் வேண்டும், உயிர் அச்சுறுத்தலான எரிவாயு களஞ்சியத்தை உடனே அகற்று, தரமற்ற எரிவாயுக் கசிவுக்கு யார் பொறுப்பு? போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கி நின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் கோமகன் மற்றும் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர் ஆகியோருடன் பொது மக்களும் கலந்துகொண்டனர்.









## காணி சுவீகரிப்புக்கு ...





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த இருவரும் நேற்று கடலுக்குச் சென்று திரும்பி வரும் வேளையில் கடற்படையினர் அவர்களை வழிமறித்தனர்.

இதன்போது கடற்படையினரின் கட்டளைக்குக் கட்டுப்பட்டவர்கள் அவ்விடத்தில் நின்ற நிலையில், கடலில் மிதந்து வந்த, சுமார் 276 கிலோ கஞ்சாவை அவர்கள் கடத்தினர் என்று தெரிவித்து கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பயணித்த படகு சிறியது. அந்தப் படகில் தொழில் முதல்கள் இருந்தன. இந்நிலையில், 276 கிலோ கஞ்சாவை எவ்வாறு அந்த படகில் கொண்டு வருவது?

அத்துடன் அவர்கள் பயணித்த படகின் ஜி.பி.எஸ்ஸினைப் பார்த்தால் அவர்கள் எங்கு சென்றுள்ளார்கள்? கஞ்சா கடத்தும் இடத்துக்கு சென்று உள்ளார்களா? எனத் தெரியவரும்.

அத்துடன், கைதுசெய்யப்பட்டவர்களை, நீங்கள் காணி சுவீகரிப்பு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள்தானே? எனக் கேட்ட கடற்படையினர், ஈவிரக்க மற்ற முறையில் தாக்கியுள்ளனர்.

இதனை, உறவினர்கள் பார்க்கச் சென்றபோது அவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் நேற்றிரவு இளவாலைப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டனர்.

எனவே, கைதுசெய்யப்பட்டவர்களைச் சரியாக விசாரணை செய்து உண்மைத் தகவலை வெளிப்படுத்த வேண்டும்- என்றனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆண்டியின் நிலையில் தமிழர்கள்

'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்பார்கள். எல்லோரும் தங்கள் மேலாண்மையைச் செலுத்துவதற்கு வாய்ப்பான ஆள் அந்த ஆண்டிதான்.

இலங்கையில் பேரினவாதிகள் தங்கள் மேலாண்மையைச் செலுத்துவதற்கு வாய்ப்பாகச் சிக்கியவர்கள் சிறுபான்மையினரான தமிழர்கள்தான். தெற்கிலிருந்து – கொழும்பிலிருந்து – வரும் பெரும்பான்மை இன மேலாண்மைவாதிகள் கயிறு விட – தங்கள் மேலாதிக்கத்தை சுமத்த – சரியான தரப்பாக சிக்கியவர்கள் வடக்குத் தமிழர்கள்தாம் போலும்.

சில தினங்களுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியும் '43 படையணி' இயக்கத்தின் பிரமுகருமான பாட்டாலி சம்பிக்க ரணவக்க வடக்கே வந்து தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றி விட்டுச் சென்றிருக்கின்றார். ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் பௌத்த பேரினவாதியாக அவர் நடந்து கொண்ட விதத்தை வடக்குத் தமிழ் மக்கள் அவ்வளவு விரைவாக மறந்து விடுவார் என அவர் எண்ணுகின்றார் போலும். தென்னிலங்கையில் பேரினவாதத்தை கிளப்பி, அதன் மூலம்தான் அவர் அரசியலில் முன்னுக்கு வந்தார் என்ற உண்மையை அவ்வளவு விரைவாக மறந்து விடுவதற்கு வடக்குத் தமிழர்கள் ஒன்றும் விவரம் தெரியாதவர்கள் அல்லர் என்பதை அவர் புரிந்து கொள்வது நல்லது.

அடுத்து, கடந்த வார இறுதியில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனாதிபதி சட்டத்தரணி புஞ்சிஹேவா வடக்கே யாழ்ப்பாணம் வந்தார். அவரும் புதுக்கயிறு ஒன்றை விட்டுச் சென்றிருக்கின்றார் – வடக்குத் தமிழ் மக்களுக்கு சட்டம் தெரியாது என்பதைப் போல.

தமிழகத்தில் புலம் பெயர்ந்துள்ள ஈழத்தமிழர்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கான வழியொன்றை அவர் சுட்டிக்காட்டிச் சென்றிருக்கின்றார் என்ற செய்தி நகைப்புக்கிடமானது

அதற்கு அந்த அகதி மக்கள் கோரிக்கை வேண்டுமாம். அதை சாதகமாக அவர் பரிசீலிப்பாராம். அவர் சொல்வது வேடிக்கையாக இருக்கின்றது.

தமிழகத்தில் உள்ள எண்பதாயிரத்துக்கும் அதிகமான இலங்கை மக்கள், இன்னும் இலங்கைப் பிரஜைகள்தான். இரண்டாவது குடியுரிமையைத் தன்னும் இந்தியா அவர்களுக்கு வழங்கவில்லை. இலங்கைத் தேர்தலில் வாக்களிக்கவும் பங்குபற்றவும் அவர்களுக்கு முழு உரித்துண்டு. அதை யாரும் கேள்விக்குட்படுத்த முடியாது. அவரவர்களின் சொந்தப் பூர்வீக மாவட்டங்களில் அவர்கள் வாக்காளர்களாகப் பதிய முடியும். அதற்கு அவர்கள் நேரில் வர வேண்டும் என்பதல்ல. அடையாள அட்டை இலக்கங்கள், விவரங்களை வைத்து அவர்களின் உறவினர்களோ, தெரிந்தவர்களோ அவர்களைச் சட்ட ரீதியான வாக்காளர்களாக அவரவர்களுக்குரிய மாவட்டங்களில் பதிந்து கொள்ள முடியும். அதற்கு தேர்தல் ஆணையாளரினதோ தேர்தல் திணைக்களத்தினதோ சகாயம் ஏதும் தேவையில்லை. அது அவர் அவர்களுக்குரிய உரித்து. இரட்டை பிரஜா உரிமையுள்ள இலங்கையர் கூட தமது பெயர்களை வாக்காளராகப் பதிந்து கொள்ள முடியும்.

அடுத்துத் தமிழ் நாட்டிலோ வெளிநாட்டிலோ இருந்தபடி இங்கு நடக்கும் தேர்தல்களில் வாக்களிப்பது. இதற்குரிய ஏற்பாட்டை கொள்கை ரீதியாக அரசு எடுத்து, உரிய சட்டங்களை நிறைவேற்ற வேண்டும். பலம் வாய்ந்த புலம் பெயர் அமைப்பாக எண்ணிக்கை ரீதியிலும் தமிழர்கள் விஞ்சி நிற்கையில், பௌத்த, சிங்களப் பேரினவாதம் அதற்கு ஒருபோதும் இணங்க போவதேயில்லை. இந்தப் பின்புலத்தில் மந்திரத்தில் மாங்காய் பறிப்பது போல வடக்கே வந்து கயிறு விடுகின்றார் தேர்தல் ஆணையாளர்.

தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளைப் பொறுத்த வரை, அவர்கள் அங்கு இருக்கும் போதே இங்கு வாக்காளர்களாக அவர்களின் பெயர்களைப் பதிவது சட்ட ரீதியான அவர்களின் உரித்து. அதற்கு தேர்தல் ஆணையாளரின் சகாயம் தேவையில்லை. தமிழகத்திலிருந்தபடி இங்கு நடக்கும் தேர்தல்களில் வாக்களிப்பது என்பது நாடாளுமன்றம் முடிவு செய்ய வேண்டிய விவகாரம். அதிலும் தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் ஏதும் கிடையாது. இது தான் உண்மை நிலைவரம்.

## இலங்கையரை கொலை செய்தவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படல் வேண்டும்!

### மேர்வின் சில்வா கோரிக்கை



பாகிஸ்தானின் சியால் கொட்டில் இலங் கையரை படுகொலை செய்த நபர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டுமென முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த கொலையாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படுவதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதி செய்ய வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமானமற்ற வகையில் பிரியந்த குமார படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனவும், இந்த பாதகச்செயலை செய்தவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

இந்த கொலை வழக்கு நீண்டு கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி இடமளிக்கக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். பாகிஸ்தானிய அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால் இலங்கை மக்கள் அதற்கான எதிர்ப்பை வெளியிடக்கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மக்கள் பொறுமையுடன் இருக் கின்றார்கள் எனவும் அது பாராட்டுக்குரியது எனவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

## விளையாட்டுத் துறையில் வருகின்ற மாற்றங்கள்

### நாமல் அறிவிப்பு



23 வயதுக்குட்பட்ட ஓர் அணியை ஒவ்வொரு விளையாட்டிலும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசிய விளையாட்டு சபை கேட்போர் கூடத்தில் இன்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விளையாட்டு சங்கங்கள் ஊடாக எதிர்காலத்தில் 23 வயதுக்கு உட்பட்டோருக்கான போட்டியை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்று காரணமாக 19 வயதுக்குட்பட்ட பாடசாலை மட்டப் போட்டிகளில் விளையாட தவறியவர்களுக்கும் இதனூடாக விசேட வாய்ப்பு வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

## வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நாளை ஒன்றிணைந்த தொழிற்சங்கப் போராட்டம்

நாடு முழுவதுமுள்ள அரச தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த போராட்டத்துக்கு வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் ஆதரவை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தச் சங்கத்தின் தலைவர் க.விக்னேஸ்வரானந்தன் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

நாடுமுழுவதுமுள்ள அரசதொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து பல்வேறு நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து நாளை (புதன் கிழமை) மேற்கொள்ளவிருக்கும் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கமாகிய நாமும் எமது ஆதரவை வழங்குகின்றோம்.

நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்துக்கு வடமாகாணத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகிய நாமும் ஒத்துழைப்பை நல்கி போராட்டத்தை வெற்றி பெறச் செய்வோம் என்று வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வவுனியாவில் பைஸர் தடுப்பூசி வழங்குவதற்கு நடவடிக்கை

வவுனியாவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது கொவிட் தடுப்பூசியாக பைஸர் வழங்க சுகாதாரப் பிரிவினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 5 நிலையங்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பைஸர் தடுப்பூசியை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை பெற்றுக் கொள்ள முடியும்.

குறித்த தடுப்பூசியை கனகராஜன்குளம் வைத்தியசாலையில் 08 ஆம் திகதியும், புளியங்குளம் வைத்தியசாலையில் 09 ஆம் திகதியும், நைனாமடு பொதுநோக்கு மண்டபத்தில் 10 ஆம் திகதியும், நெடுங்கேணி வைத்தியசாலையில் 13 ஆம் திகதியும், காட்டுகுளம் பொதுநோக்கு மண்டபத்தில் 14 ஆம் திகதியும் பெற்றுக்கொள்ள முடியும்.

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதங்கள் கடந்திருப்பின் தமது தடுப்பூசி அட்டையுடன் சென்று மூன்றாவதாக பைஸர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.



## பிரித்தானியா–அமெரிக்காவிலுள்ள

# ரோஹிங்கியா அகதிகள் பேஸ்புக் மீது வழக்கு

பிரித்தானியா மற்றும் அமெரிக்காவிலுள்ள ரோஹிங்கியா அகதிகள் ஃபேஸ்புக் மீது வழக்குத் தொடுத்துள்ளனர்.

சமூக ஊடக நிறுவனமான பேஸ்புக், தங்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகளை பரப்ப அனுமதிப்பதாக ரோஹிங்கியா அகதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பேஸ்புக்கின் தளங்கள் துன்புறுத்தப்பட்ட சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறையை ஊக்குவிப்பதாகக் கூறி, அவர்கள் 150 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பீடாகக் கோருகின்றனர்.

எனினும், மீட்டா என அழைக்கப்படும் பேஸ்புக், இந்த குற்றச்சாட்டுகளுக்கு உடனடியாக பதிலளிக்கவில்லை.

பிரித்தானியாவில், அகதிகள் சிலரை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரித்தானிய சட்ட நிறுவனம் பேஸ்புக்கிற்கு ஒரு கடிதம் எழுதியுள்ளது.

அதேபோல, அமெரிக்காவில், வழக்கறிஞர்கள் சான் பிரான்சிஸ்கோவில் பேஸ்புக்கிற்கு எதிராக சட்டப்பூர்வ புகாரை பதிவு செய்தனர்.

வெறுக்கத்தக்க மற்றும் ஆபத்தான தவறான தகவல்களைப் பரப்புவது பல ஆண்டுகளாக தொடர அனுமதிப்பதாக நிறுவனம் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ரோஹிங்கியா மக்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சை விரிவுபடுத்தியது, ரோஹிங்கியர்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டும் பதிவுகளை அகற்றவோ அல்லது கணக்குகளை நீக்கவோ நிறுவனம் தவறிவிட்டது.

தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் எச்சரித்த போதிலும், அது தகுந்த மற்றும் சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்க தவறிவிட்டது என பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2017ஆம் ஆண்டு பௌத்தர்கள் பெரும்பான்மையாக உள்ள தென்கிழக்கு ஆசிய நாடான மியன்மாரில் இராணுவ ஒடுக்குமுறையின் போது 10,000 ரோஹிங்கியா முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# பிரித்தானியாவில் ஒமிக்ரோன் பயணக்கட்டுப்பாடுகள் அமுலில்

ஒமிக்ரோன் மாறுபாட்டின் பரவலைக் கட்டுப்படுத்தும் புதிய விதிகள் நடைமுறைக்கு வருகின்றமையால், பிரித்தானியாவுக்கு வருபவர்கள் பயணம் செய்வதற்கு முன் எதிர்மறையான கொவிட் சோதனைக்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டும்.




சந்தேகத்திற்கிடமான ஓமிக்ரோன் நோயாளியின் தொடர்புகள் ஏற்கனவே 10 நாள்களுக்கு சுயதனிமைப்படுத்தப்பட வேண்டும். இதில் முழு தடுப்பூசியும் அடங்கும்.

பிரித்தானியாவில் தற்போது 336 புதிய மாறுபாட்டின் உறுதிப்படுத்தப்பட்ட தொற்றுகள் உள்ளன.

பிரித்தானியாவின் பல பகுதிகளில் சமூகத்தில் ஒமிக்ரோன் பரவி வருவதை சுகாதார செயலாளர் சாஜித் ஜாவிட் உறுதிப்படுத்தியுள்ளார்.

பிரித்தானியாவுக்கு வரும் மக்கள், அவர்கள் வந்த பிறகு இரண்டாவது நாளில் எதிர்மறையான பி.சி.ஆர். பரிசோதனையைப் பெறும் வரை தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. அரசாங்கத்தின் புதிய நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து பயணிகளும் புறப்படுவதற்கு முன் எதிர்மறையான பி.சி.ஆர். அல்லது பக்கவாட்டு ஓட்ட சோதனைக்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டும்.

# ஆயுதமேந்தியவர்களால் துன்புறும் கந்தஹார் குடியிருப்பாளர்கள்

கந்தஹாரின் தென் மாகாணத்தில் வசிக்கும் மக்கள் தங்களது விரக்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இஸ்லாமிய எமிரேட் படைகளின் உறுப்பினர்கள் என்று கூறிக் கொள்ளும் சில ஆயுதம் ஏந்திய நபர்கள், தங்களுக்கு இடையூறு விளைவிக்கின்றனர் என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆகவே, சம்பவம் தொடர்பான குற்றவாளிகளை இனங்காணுமாறு, அதிகாரிகளுக்கு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மற்றும் அவர்களின் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துபவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்று முகமது அமீன் கூறியுள்ளார்.

இதற்கிடையில் ஆணையத்தின் தலைவர் முப்தி லத்திபுல்லா ஹக்கிமி கூறியுள்ளதாவது, இஸ்லாமிய எமிரேட்டின் சீர்திருத்த ஆணையகம், தப்பியோடியதற்காக நீதிமன்றங்களை நடத்துபவர்கள் மற்றும் மக்களை ஒடுக்குபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று கூறியது.



நாங்கள் அவர்களின் நல்ல செயல்களைப் பாராட்டுகிறோம். அதேநேரம் மோசமான செயல்களை விமர்சிக்கிறோம். அமைதியான முறையில் விமர்சனம் செய்யும் உரிமை மக்களாகிய எங்களுக்கு உள்ளது.

பொதுமக்களை ஒடுக்கும் இஸ்லாமிய எமிரேட் படைகளில் உள்ளவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அவர்கள் தங்கள் படைகளில் கடுமையான சீர்திருத்தத்தை கொண்டு வர வேண்டும் என சைமத் அஹ்மத் ஜாஹித் என்பவர் கூறியுள்ளார்.

இதேவேளை இஸ்லாமிய எமிரேட் படைகளுடன் தொடர்புடையவர்கள் மக்களுக்குத் தொல்லை கொடுப்பவர்களைத் தடுக்கவே சீர்திருத்த ஆணையகம் உருவாக்கப்பட்டது.

இஸ்லாமிய அமீரகத்தின் கொள்கையை மீறும் மற்றும் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் இஸ்லாமிய எமிரேட் படைகளை பதவி நீக்கம் செய்வதற்கான அதிகாரம் எங்களுக்கு தலைமையால் வழங்கப்பட்டுள்ளது என கூறியுள்ளார்.

ஆணைக்குழுவின் கருத்துப்படி, இஸ்லாமிய எமிரேட் படைகளின் 650 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள், பல்வேறு குற்றங்களுக்காக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# தாய்லாந்து, நேபாளத்திலும் காலூன்றியது ஒமிக்ரோன்

தாய்லாந்து மற்றும் நேபாளத்தில் புதிய கொரோனா வைரஸ் மாறுபாடான ஒமிக்ரோன் தொற்று, கண்டறியப்பட்டுள்ளது.

நேபாளத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர் என இருவருக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இந்த மாறுபாட்டுடன் கண்டறியப்பட்ட நேபாள நாட்டவர் 71 வயதுடையவர் எனவும் வெளிநாட்டவருக்கு 66 வயது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டவர் திரிவுடன் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து விமானம் வழியாக நேபாளத்திற்குள் நுழைந்தார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேபோல முதலாவது ஒமிக்ரோன் தொற்று தாய்லாந்தில் கண்டறியப்பட்டுள்ளது.

ஸ்பெயினிலிருந்து நாட்டிற்கு வந்த தாய்லாந்து வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க தொழிலதிபரிடம் கொரோனா வைரஸ் மாறுபாடு கண்டறியப்பட்டது என்று மூத்த பொது சுகாதார அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 35 வயதான அந்த நபர் தாய்லாந்திற்கு வந்தபோது நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் புதிய மாறுபாடு கண்டறியப்பட்டதாக மருத்துவ அறிவியல் துறையின் இயக்குநர் ஜெனரல் சுபாகிட் சிரிலக் தெரிவித்தார்.

அவர் எமிரேட்ஸ் எயார்லைன் விமானத்தின் ஊடாக, டுபாயிலிருந்து சுவர்ணபூமி விமான நிலையத்திற்கு வந்தார் எனவும் அவருக்கு எந்த அறிகுறியும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அவர் எந்த நாளில் தாய்லாந்தில் நுழைந்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# நாகாலாந்தில் மக்கள் மீது துப்பாக்கிச்சூடு; நாடாளுமன்றத்தில் அமித்ஷா விளக்கம்

நாகாலாந்தில் அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அறிக்கை தாக்கல் செய்து உரையாற்றினார். முதலில் நாடாளுமன்ற மக்களவையிலும், பின்னர் மாநிலங்களவையிலும் அவர் உரை நிகழ்த்தினார்.

நாகாலாந்தின் மோன் நகரில் அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்கள் நடமாட்டம் இருப்பதாக இராணுவத்திற்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 21 கமாண்டோ படையினர் அங்கு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அப்போது அங்கு வந்த வாகனத்தை இராணுவ வீரர்கள் தடுத்து நிறுத்த முற்பட்டனர். அது நிற்காமல் சென்றதால், சந்தேகத்திற்கிடமான அந்த வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதில் இருந்த 8 பேரில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அந்த வாகனத்தைச் சோதனை செய்தபின்தான் அது தவறாக அடையாளம் காணப்பட்டது என்பது தெரியவந்தது.

இதையடுத்து வாகனத்தில் காயமடைந்த நிலையில் இருந்த இரண்டு பேர் உடனடியாக அருகில் இருந்த இராணுவ சிகிச்சை மையத்தில் அனுமதிக்கப்பட்டனர். இந்தச் செய்தி குறித்துக் கேள்விப்பட்ட கிராம மக்கள் அங்கு திரண்டு வந்து இராணுவத்திற்குச் சொந்தமான இரு வாகனங்களுக்குத் தீவைத்தமையுடன், இராணுவத்தினர் மீது தாக்குதலும் நடத்தினர்.

இதில் ஒரு பாதுகாப்பு படை வீரர் உயிரிழந்தார். பல வீரர்கள் காயமடைந்தனர். இதையடுத்து கூட்டத்தைக் கலைக்கும் வகையிலும், சுய பாதுகாப்பு அடிப்படையிலும் பாதுகாப்புப் படையினர் அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கியால் சுட்டதில் 7 பொதுமக்கள் உயிரிழந்தனர். சிலர் காயமடைந்தனர். உடனடியாக உள்ளூர் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.

இதற்கு பின்னர் அன்று மாலை 250க்கும் மேற்பட்டோர் அடங்கிய கும்பல் திரண்டு வந்து மோன் நகரில் உள்ள அசாம் ரைபிள் படை வீரர்கள் முகாமிற்குத் தீ வைத்தது. இதையடுத்து கும்பலைக் கலைக்க வீரர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். அங்கு பதற்றம் ஏற்பட்டாலும் நிலைமை தற்போது கட்டுக்குள் உள்ளது. நாகாலாந்து டி.ஜி.பி. மற்றும் பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்தை ஆய்வு செய்தனர். மாநில குற்றவியல் பொலிஸ் நிலையம் சார்பில் சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு ஒரு மாதத்திற்குள் விசாரணை நடத்தி முடிக்கும்.

நாகாலாந்தில் அப்பாவி மக்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணி குறித்து இராணுவத் தரப்பில் உயர்மட்ட விசாரணை நடத்தப்பட்டு, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும், என்று தனது உரையின்போது இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா குறிப்பிட்டார்.

## இந்தியா – ரஷ்யா இருதரப்பு உச்சி மாநாடு டெல்லியில் நேற்று மாலை ஆரம்பமாகியது

இந்தியா - ரஷ்யா நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உச்சி மாநாடு ஆண்டு தோறும் நடைபெறுவது வழமை. கடந்தாண்டு கொரோனாப் பரவல் காரணமாக இந்த மாநாடு நடக்கவில்லை. இந்த வருடத்துக்கான மாநாடு டெல்லியில் நேற்று நடைபெற்றது. அதனால், இந்தியத் தலைநகர் டெல்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஒரு நாள் பயணமாக இந்தியா சென்ற ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடன் ரஷ்ய பாதுகாப்புத் துறை, வெளியுறவுத் துறை அமைச்சர்களும் சென்றிருந்தனர்.

நேற்று மாலை மொஸ்கோவில் இருந்து டெல்லி சென்ற ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை, இந்தியப் பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் வரவேற்றனர். மாலை 5.30 மணியளவில் டெல்லியில் உள்ள ஐதராபாத் மாளிகையில் இந்தியப் பிரதமர் மோடி - ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தலைமையிலான 21 ஆவது ஆண்டு இந்தியா - ரஷ்யா உச்சி மாநாடு ஆரம்பமானது.

அப்போது உரையாற்றிய இந்தியப் பிரதமர் மோடி, இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான நட்பு நிலையானது, நம்பகமானது, தனித்துவமானது. இரு நாடுகளுக்குமிடையேயான உறவுகளின் வளர்ச்சி வேகத்தில் எந்த மாற்றமும் இல்லை. கொரோனாத் தொற்று சவால்களை ஏற்படுத்திய போதிலும் இருநாடுகளின் உறவு தொடர்ந்து வலுப்பெற்றுவருகிறது என தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ரஷ்ய அதிபர், இந்தியா வந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியாவை வலுவான நாடாகவும், நம்பகமான நண்பனாகவும் கருதுகிறோம். ஆப்கானிஸ்தானில் தீவிரவாதமும், தீவிரவாதத்திற்கு நிதி அளிப்பதும் அச்சுறுத்தலாக உள்ளது. ஆப்கானில் நிலவி வரும் சூழல் குறித்து கவனித்து வருகிறோம், எனக் குறிப்பிட்டிருக்கிறார்.



## அ.தி.மு.க.வில் சசிகலா, தினகரனுக்கு இடமில்லை என்கிறார் கடம்பூர் ராஜு



அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு கோவில்பட்டியில் உள்ள அவரது சிலைக்கு அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரும், தற்போதைய எம்.எல்.ஏயுமான கடம்பூர் ராஜு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் அவர் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார்.

ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் ஓ.பி.எஸ்., இ.பி.எஸ். தலைமையில் அ.தி.மு.க. நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் ஊரக உள்ளாட்சி தேர்தல்களை சந்தித்துள்ளது. அ.தி.மு.கவில் இனி இரட்டைத்தலைமைதான் என்பதனை கட்சியின் நிர்வாகிகளும் தொண்டர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதற்காக கட்சியில் சட்டத் திருத்தமும் கொண்டு வரப்பட்டுள்ளது.

சசிகலா, டி.டி.வி. தினகரன் ஆகியோர் அ.தி.மு.கவில் இணைத்துக் கொள்ளப்படுவர்களா? என்ற கேள்விக்கே இடமில்லை. அ.தி.மு.க.வில் இருந்து பிரிந்து சென்று கட்சி ஆரம்பித்தவர்கள் மீண்டும் அ.தி.மு.கவிற்கு வருவது நடக்காத காரியம். சென்னையில் ஜெயலலிதா நினைவிடத்தில் நேற்று அநாகரிகமான வகையில் நடந்துகொண்டனர். அ.தி.மு.கவில் ஒட்டும் கிடையாது, உறவும் கிடையாது என்ற நிலைப்பாட்டை அவர்களே எடுத்துக் கொண்டனர்.

அ.தி.மு.கவைப் பொறுத்தவரை நிரந்தரப் பொதுச்செயலாளர் ஜெயலலிதா மட்டும்தான். ஜெயலலிதா நினைவு நாளைத் துக்க நாளாக அனுசரிக்க வேண்டிய நேரத்தில் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். ஜெயலலிதாவிடம் பாசமும் மரியாதையும் இல்லாதவர்கள்தான் இது போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள். அ.ம.மு.கவினர் ஈடுபட்டார்களா, அல்லது அவர்கள் போர்வையில் வேறு யாரும் ஈடுபட்டார்களா என்பதை டி.டி.வி. தினகரன்தான் கண்டறிய வேண்டும், என்று கடம்பூர் ராஜு ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

## கொரோனா பாதுகாப்பு விதி முறை மீறலுக்காக கமலுக்கு தமிழக மருத்துவத்துறை நோட்டீஸ்?

சில நாள்களுக்கு முன்பு கமல் ஹாசன் கொரோனா வைரஸ் பாதிப்பால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். இதனால், பிக்பாஸ் எனப்படும் அவர் தொகுத்து வழங்கும் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கமுடியாத நிலை ஏற்பட்டது. கமலுக்குப் பதிலாக பிக்பாஸ் நிகழ்ச்சியை ஒரு வாரம் ரம்யா கிருஷ்ணன் தொகுத்து வழங்கினார். பூரண நலம் பெற்ற கமல்ஹாசன் 4 ஆம் திகதி மருத்துவமனையில் இருந்து வெளியேறியிருந்தார். மருத்துவமனையிலிருந்து புறப்பட்டு நேராக பிக்பாஸ் படப்பிடிப்பு நடக்கும் ஈவிபி அரங்கத்திற்கு சென்ற அவர் படப்பிடிப்பிலும் கலந்துகொண்டார்.

இந்தநிலையில், தமிழக சுகாதாரத்துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணனிடம் ஊடகவியலாளர்கள் கமல்ஹாசன் போதுமான நாள்கள் தனிமைப்படுத்திக்கொள்ளாமை பற்றி கேள்வியெழுப்பியிருந்தனர். அதற்கு அவர், கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தாலும், அதன் பின் 7 நாள்கள் வீட்டில் தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டு இருக்க வேண்டும். ஆனால் கொரோனா சிகிச்சை முடிந்து திரும்பிய நடிகர் கமல்ஹாசன், 7 நாள்கள் வீட்டுத் தனிமையில் இல்லாமல் பிக்பாஸ் நிகழ்ச்சிக்குச் சென்றிருக்கிறார். இவ்வாறு விதிமுறைகளை மீறி நேராக படப்பிடிப்புக்கு சென்றது தொடர்பாக விளக்கம் அளிக்க கமலுக்கு தமிழக மருத்துவத்துறையால் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்படும், என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# சாணக்கியன் முஸ்லிம் சமூகத்திற்கு குரல் கொடுப்பது தமிழ் – முஸ்லிம் உறவில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும்

## கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் சுபைர் தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இளம் அரசியல்வாதியான இரா. சாணக்கியன் முஸ்லிம் சமூகத்திற்காகவும் குரல் கொடுப்பது தமிழ் முஸ்லிம் உறவில் திருப்பத்தை ஏற்படுத்தும் என தான் உறுதியாக நம்புகிறேன் என கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் மாகாண சபை முன்னாள் பிரதித் தவிசாளருமான எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

வீட்டுத்தோட்ட விவசாயிகளுக்கு தனது இரண்டரை லட்ச ரூபா நகர சபை நிதி ஒதுக்கீட்டில் சேதன வளமாக்கித் தயாரிப்புத் தொட்டி வழங்கி வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் பொது இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் சுபைர் தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்து வாழ்கின்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் எடுத்துவரும் முயற்சிகளையும் அவரது நல்ல சிந்தனைகளையும் நான் வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

அதேநேரம் அவர் முஸ்லிம் சமூகத்திற்காகவும் குரல் கொடுப்பதால் குறுகிய மனமுள்ள சிலர் அவரது போக்கை சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றார்கள் அது வருத்தமளிக்கின்றது.

அவரைப் போன்றே மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒற்றுமைப்படுத்தும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்

ஈஸ்டர் தாக்குல் சம்பவத்தின் பின்னர் முஸ்லிம் சமூகத்திற்கு மிகப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. பாரிய அபாண்டத்தைச் சுமத்தினார்கள். முஸ்லிம் சமூகத்தின் மீது அபகீர்த்தியும் அவநம்பிக்கையும் ஏற்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது தாங்கள்கொண்டிருந்தஅந்தநிலைப்பாட்டை சிங்கள மக்கள் மாற்றிக் கொண்டு முஸ்லிம் சமூகத்தை அனுதாபத்தோடு நோக்கத் துவங்கியிருக்கிறார்கள்.

நடந்த தப்பபிப்பிராயத்துக்காக அவர்கள் வருந்துகிறார்கள். அந்தத் தாக்குதலில் முஸ்லிம் சமூகம் சம்பந்தப்படவில்லை என்பதையும் இது அரசியலை அடைவதற்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சி என்பதையும் சிங்கள மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள்.



அதேவேளை கடந்த காலங்களில் தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான ஐக்கியத்தைக் கட்டி வளர்க்காமல் தவறு விட்டிருக்கின்றார்கள். இதனை நிவர்த்தி செய்யும்வகையில்இப்போதுஅரசியலுக்குள் நுழைந்துள்ள புதிய அரசியல்வாதிகள் புதிய போக்கிலே சிந்தித்து சந்தேகங்களை நீக்கவேண்டும். மக்களைசிறந்தமுறையில் வழிநடத்த வேண்டும். தமிழ் முஸ்லிம் ஒற்றுமையை வலுப்பெறச் செய்ய வேண்டும் என்றார் .

# மகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் காத்தான்குடியில் தந்தை கைது

தனது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் செல்ல முயன்றவரை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்குறித்த சம்பவமானது மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலமுனை பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இதன் போது சுமார் 13 வயது மதிக்கத்தக்க மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த தந்தை இரவு கொழும்பிற்குத் தப்பிச் செல்வதற்காக காத்தான்குடி பஸ் தரிப்பிடத்தில் மறைந்திருந்த போது காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையில் சென்ற பொலிஸார் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதானவர் 36 வயதுடையவர் என்பதுடன் இவரது மனைவி மத்தியகிழக்கு நாடொன்றில் பணியாற்றி வருகின்றமையும் பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி காத்தான்குடி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு இன்று காலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக இடமாற்றப்பட்டுள்ளார்.

கைதாகிய சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# இன நல்லுறவிற்கான சந்தை திறப்பு

'பொருளாதாரம் நல்லாட்சியில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பு' என்ற தொனிப்பொருளில் இன நல்லுறவிற்கான சந்தை மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் கோ.தனபாலசுந்தரம் அவர்களினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

பிரதேசத்தில் இளைஞர்கள், பெண்கள், தொழில் முயற்சியாளர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் முகமாக அவர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை சந்தைப்படுத்தும் முகமாக இவ் விற்பனை சந்தை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.



தமிழ்,முஸ்லிம் பயனாளிகள் 48 பேருக்காக தலா 85,000 ரூபா பெறுமதியான உள்ளீட்டு உபகரணப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் 11 குழுக்களுக்கான 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உள்ளீடுகளை வழங்கி இவர்களின் தொழில் முயற்சி மேப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

15 வகையான உள்ளூர் உற்பத்தி பொருள்கள் சந்தைப்படுத்தப்பட்டன. இதில் தைத்த ஆடைகள்,உணவுப் பொருள்கள்,மரக்கறி வகைகள்,தானியப் பொருள்கள்,தேன் என பல்வேறு வகையான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன.

இதற்கானநிதிஅனுசரணையைமட்டக்களப்பு அரசசார்பற்ற நிறுவனமான பெரெண்டினா அபிவிருத்தி சேவை நிறுவனம் வழங்கியுள்ளது. நிகழ்வில் வாழைச்சேனை பிரதேச செயலக திட்ட முகாமையாளர் எஸ்.கங்காதரன், பெரெண்டினா நிறுவன திட்ட முகாமையாளர் எஸ்.சிவராஜா,திட்ட இணைப்பாளர்களான வி.மிதுனன்,எம்.சுரேஸ் சமூக வலுவூட்டாளர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.



# காலி கிளேடியேட்டர்ஸ் அணியை கொழும்பு ஸ்டார்ஸ் அணி வென்றது



லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடரின் மூன்றாவது போட்டியில், கொழும்பு ஸ்டார்ஸ் அணி 4 விக்கெட்டுக்களால் காலி கிளாடியேட்டர்ஸ் அணியை வெற்றிபெற்றுள்ளது.

கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற காலி கிளாடியேட்டர்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து,116 ஓட்டங்களைப் பெற்றது. பென் டங் 38 ஓட்டங்களையும் இருசு உதான ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும் எடுத்தனர். கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் தனஞ்சய டி சில்வா, துஸ்மந்த சமீர மற்றும் அகில தனஞ்சய ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 117 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய கொழும்பு ஸ்டார்ஸ் அணி, 17.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிபெற்றது. தினேஷ் சந்திமால் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 24 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். காலி கிளாடியேட்டர்ஸ் அணியின் நுவான் துசார மற்றும் புலின தரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் தனஞ்சய டி சில்வா தெரிவுசெய்யப்பட்டார்.

# கண்டி வொரியர்ஸை வீழ்த்தியது தம்புள்ளை ஜயண்ட்ஸ் அணி



லங்கா பிறீமியர் தொடரின் இரண்டாவது போட்டியில், தம்புள்ளை ஜயண்ட்ஸ் அணி 20 ஓட்டங்களால் கண்டி வரியர்ஸ் அணியை வென்றது. கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் தம்புள்ளை ஜயண்ட்ஸ் அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது. 20 ஓவர்கள் நிறைவில் அந்த அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 190 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பில் சோல்ட் 64 ஓட்டங்களையும் தசுன் சானக 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

கண்டி வரியாஸ் அணியின் லஹிரு குமார 3 விக்கெட்டுக்களையும் அல் அமீன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். 191 என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய கண்டி வொரியாஸ் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களையே பெறமுடிய, இதனால், தம்புள்ளை ஜயண்ட்ஸ் அணி 20 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ரொவ்மன் பவல் 42 ஓட்டங்களையும் அணித்தலைவர் அஞ்சலோ பெரேரா 24 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

தம்புள்ளை ஜயண்ட்ஸ் அணியின் நுவான் பிரதீப் மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் இம்ரான் தாஹிர் மற்றும் தசுன் சானக ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக, தம்புள்ள ஜயண்ட்ஸ் அணியின் பில் சோல்ட் தெரிவு செய்யப்பட்டார்.

# எல்.பி.எல். கிரிக்கெட் தொடரிலிருந்து பினுர பெர்னான்டோ விலகினார்



தற்போது நடைபெற்றுவரும் லங்கா பிறீமியர் லீக் தொடரில் கண்டி வரியர்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட இளம் வேகப்பந்துவீச்சாளரான பினுர பெர்னான்டோ தொடரிலிருந்து வெளியேறியிருக்கிறார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

ரி-20 உலகக் கிண்ணத்தொடரின்போது ஏற்பட்ட உபாதையில் இருந்து முழுமையாகக் குணமடையாத காரணத்தினாலேயே, மேலும் சில வாரங்கள் ஓய்வில் இருப்பதற்காக அவர் எல்.பி.எல். தொடரிலிருந்து வெளியேறியிருக்கிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது. ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான போட்டியின்போது அவர் உபாதைக்கு ஆளாகியிருந்தார்.

கண்டி வரியர்ஸ் அணி, பினுர பெர்னான்டோவிற்குப் பதிலாக மற்றுமொரு வேகப்பந்துவீச்சாளரான கசுன் ராஜிதவை அணிக்குள் உள்வாங்கியிருப்பதாகத் தெரிகிறது. தற்போது தனிமைப்படுத்தலில் உள்ள கசுன் ராஜித, தனது தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்த பின்னர் கண்டி வரியர்ஸ் அணியுடன் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.




# ஐ.பி.எல். 2022 தொடரின் வீரர்களுக்கான மெகா ஏலம் ஜனவரி இரண்டாம் வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது

15 ஆவது ஐ.பி.எல். தொடர் அடுத்த ஆண்டு ஏப்ரல் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வழமையான எட்டு அணிகளோடு லக்னோ, அகமதாபாத் ஆகிய இரு அணிகள் இணைந்துள்ளன. வீரர்களுக்கான மெகா ஏலம் ஜனவரி முதல் வாரத்தில் நடைபெறும் என்று முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அது ஜனவரி இரண்டாவது வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அகமதாபாத் அணியை ஏலத்தில் வாங்கியுள்ள சி.வி.சி. கப்பிட்டல் என்ற நிறுவனம் சூதாட்ட நிறுவனங்களிலும் முதலீடு செய்திருப்பதாகச் சர்ச்சை எழுந்துள்ளதால், அது தொடர்பாக விசாரணை செய்வதற்குக் குழுவொன்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் அடுத்த வாரமளவில் இறுதி முடிவு எடுக்கப்படுமென்றும், அதன் பின்னர் இரண்டு புதிய அணிகளும் ஏலத்திற்கு முன்னதாக 3 வீரர்களை வாங்கிக்கொள்ள 31ஆம் திகதி வரை வாய்ப்பு வழங்கப்படும் என்றும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஏன் இந்தியாவுக்கு சென்றார்?

## ரணில் விக்கிரமசிங்க கேள்வி



இலங்கையின் வெளிநாட்டு நாணய ஒதுக்கத்தின் இருப்பு குறித்து இன்னும் நாடாளுமன்றத்துக்கு முன்வைக்கப்படவில்லை என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க, கடந்த வாரத்தில் மத்திய வங்கியில் இருக்கும் வெளிநாட்டு நாணய ஒதுக்கத்தின் பெறுமதி தொடர்பாகத் தகவல் வெளியிடுவதாகத் தெரிவிக்கப்பட்டபோதும், இன்னும் அது வெளியிடப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

நிதியமைப்பை ஒழுங்குபடுத்தும் அமைப்பு நாடாளுமன்றம் என்பதால், வெளிநாட்டு நாணய ஒதுக்கம் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு வெளிப்படுத்தப்படவேண்டும்.

இதனை விடுத்து இந்திய அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கையின் வெளிநாட்டு நாணய ஒதுக்கம் தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

இதேவேளை பாதீட்டு விவாதங்களுக்கு மத்தியில் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தில் இல்லாமல், ஏன் இந்தியாவுக்கு சென்றார் என்று ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பினார்.

# பிரியந்த படுகொலை விவகாரம் முக்கியமான குற்றவாளி கைது

இலங்கை முகாமையாளர் பிரியந்த குமார படுகொலை செய்யப்பட்ட வழக்கில் மிகவும் தீவிரமாகத் தேடப்படும் குற்றவாளி நேற்று (திங்கட்கிழமை) கைதுசெய்யப்பட்டார் எனப் பஞ்சாப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சந்தேக நபர் பில்லி எனப்படும் இம்தியாஸ் என அடையாளம் காணப்பட்டமையுடன், அவர் மறைந்த பிரியந்த குமாரவை சித்திரவதை செய்து அவரது உடலை அவமானப்படுத்தியவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராவல்பிண்டிக்கு செல்லும் பஸ்ஸில் வைத்து குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டார் என்று பஞ்சாப் பொலிஸார் டுவிட்டரில் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, நேற்று பஞ்சாப் பொலிஸார் மேலும் ஏழு முக்கிய நபர்களை கைது செய்துள்ளனர். இதில் இலங்கை மேலாளர் ஒருவரை படுகொலை செய்ய சதி செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் மற்றும் வன்முறை மற்றும் தூண்டுதலின் குற்றவாளிகளில் ஒருவர் அடங்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# அருவியில் குளிக்கச் சென்ற இராணுவ அதிகாரி சாவு

இரத்தினபுரி குருவிட்ட பொலிஸ் பிரிவில் வலந்துர கெரடி நீரருவியில் நீராடச் சென்ற நிலையில், காணாமல் போன இராணுவ கப்டனின் சடலம் நேற்று நீரருவிக்கு கீழே உள்ள ஆற்றில் காணப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

குருவிட்ட பொலிஸ் நிலைய அதிகாரிகள், குருவிட்ட இராணுவ முகாம் அதிகாரிகள் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து மேற்கொண்ட தேடுதலில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குருவிட்ட கெமுனு ஹேவா படைப்பிரிவில் பணியாற்றி வந்த மில்லவிய பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையான கப்டன் சுரன் ரணசிங்க என்ற 32 வயதான அதிகாரியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் மேலும் மூன்று பேருடன் இணைந்து கடந்த 5 ஆம் திகதி நீரருவியில் குளிக்கச் சென்றுள்ளார். இவர்களில் இரண்டு பேர் குளித்து விட்டு கரைக்கு திரும்பிச் சென்றுள்ளனர். இரண்டு பேர் தொடர்ந்தும் அருவியில் குளித்துள்ளனர்.

திடீரென புரண்டு வந்த தண்ணீரில் இராணுவ அதிகாரி அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன் மற்றைய நபர், மரக் கிளை ஒன்றை பற்றிப்பிடித்து உயிர் தப்பியுள்ளார்.

இதனையடுத்து நீரில் அடித்துச் செல்லப்பட்ட அதிகாரியை தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர் சடலமாக நேற்று மாலை மீட்கப்பட்டார் எனக் குருவிட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இ-சிற்றி விருது வழங்கும் விழாவில் 516 மாணவர்களுக்குக் கௌரவம்!

## இலங்கையின் அனைத்து மாகாண மாணவர்களும் இம்முறை பங்கேற்பு










இ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் விருது வழங்கும் விழா கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் இயங்கிவரும் இ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் ஆங்கிலம், சிங்களம் மற்றும் கணனிப் பாடநெறிகளைப் பூர்த்தி செய்தோருக்கான டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் கல்லூரியின் அதிபர் தேசமானிய லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உளவியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மு.கஜவிந்தனும், சிறப்பு விருந்தினர்களாக கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநரும் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளருமாகிய லயன் எஸ்.ரங்கநாதன், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக இ- சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் பணிப்பாளர் டாக்டர் க.ஜெயச்சந்திரமூர்த்தி, முகாமைத்துவப் பணிப்பாளர் டாக்டர் அ.ஜெயக்குமார் ஆகியோரும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் பாடநெறிகளைப் பூர்த்தி செய்த 516 மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப் பட்டமையுடன் பயிற்சி நெறியில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்ற 60 மாணவர்களுக்குப் பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இலங்கையில் ஆங்கிலக் கல்விக்கு புகழ்பெற்ற இ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் இந்த வருடம் இலங்கையின் அனைத்து மாகாணங்கள் மற் றும் மாவட்டங்களில் இருந்து மாணவர்கள் கற்று வெளியேறியமே விசேட அம்சமாகும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.12.2021இல் வெளியிடப்பெற்றது.